# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

---

(2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2010, திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 13.00 தபாற் செலவு : ரூபா 20.00

## 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

[2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ. 36/2008

**பயங்கரவாத அல்லது நாசகாரச் செயற்பாட்டின் அல்லது குடியமைதிக்குலைவின் விளைவொன்றினால் காணாமற் போனதாக அறிக்கையிடப்பட்ட ஆட்களினதும், தேசிய மட்டத்தில் பாரதூரமான விளைவுகளையுடைய ஏதேனும் அத்தகைய செயற்பாடு, இயற்கை அனர்த்தம் அல்லது பேரிடர் எவ்வாட்களின் இறப்புக்கு நேரடியாக ஏற்றிக் கூறப்படற்பாலதாகின்றதோ அவ்வாட்களினதும் இறப்புக் களைப் பதிவுசெய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்பு பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கையில் பயங்கரவாத அல்லது நாசகாரச் செயற்பாடுகள் அல்லது குடியமைதிக்குலைவு காரணமாக இடம்பெற்ற குடிமக்களின் குழப்பத்தின்போது பல ஆட்கள் இறந்துள்ளார்கள் அல்லது காணாமற்போனதாக அறிக்கையிடப்பட்டுள்ளது ஆதலாலும் : முன்னுரை.

அத்துடன் தேசிய அளவில் இயற்கை அனர்த்தங்களுக்கு அல்லது பேரிடர்களுக்கு உட்படுத்தப்பட்டதன் காரணமாக பல மக்கள் இறந்துள்ளார்கள் ஆதலாலும் :

அத்துடன் பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மேலே எண்ணிக்கூறப்பட்ட சூழ்நிலைகளில் அத்தகைய இறப்புக்களின் பதிவுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற குறித்த சில செயன்முறை இடர்பாடுகள் இருக்கின்றதாதலாலும் :

அத்துடன் அத்தகைய இறப்புக்களைப் பதிவுசெய்வதற்கான வழிமுறைகளை ஏற்பாடு செய்து சட்டமியற்றுவது தற்போது அவசியமாக வந்துள்ளதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

2 -PL 005298-1,150 (2010/10)

இச்சட்டத்தின் சுருக்கப்பெயரும் நிலைபேறு காலமும், நடைமுறைக் காலநீடிப்பும்.

1. (1) இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அது தொடங்கிய திலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நடைமுறை யிலிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அமைச்சரானவர் இச்சட்டத்தின் ஏதேனும் நடைமுறைக்காலம் முடிவுறுதற்கு ஒரு மாதத்துக்குக் குறையாது முன்னராக, அத்த கைய நடைமுறைக்காலத்தை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நீடிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் நீடிப்பு ஒவ்வொரு தடவையிலும் ஈராண்டு காலப்பகுதியொன்றுக்கு மேற்படுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்படும் ஏதேனும் காலநீடிப்புத் தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானி யில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் I

## பயங்கரவாத அல்லது நாசகாரச் செயற்பாட்டினால் அல்லது குடியமைதிக்குலைவினால் காணாமற்போன ஆட்களின் இறப்பைப் பதிவுசெய்தல்

பயங்கரவாத செயற்பாடு போன்றவை காரணமாக காணமற்போன ஆட்களின் விடயத்தில் இறப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு யார் விண்ணப் பிக்கலாம் என்பதும் நடவடிக்கை முறையும்.

2. (1) எவரேனும் ஆளைக் காணவில்லை என அறிக்கை யிடப்பட்டு அவர் உயிரோடு இருந்திருப்பின் அவரைப்பற்றி எப்படியும் கேள்விப்பட்டிருக்கக்கூடியவர்களால் ஓராண்டிற்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு அவரைப் பற்றி கேள்விப்பட் டிருக்காமலும், அத்துடன் அவர் காணாமற்போனது இலங்கை யினுள் இடம்பெற்ற ஏதேனும் பயங்கரவாத அல்லது நாசகாரச் செயற்பாட்டிற்கு அல்லது குடியமைதிக்குலைவுக்கு ஏற்றிக் கூறப்படக்கூடியதாயுமிருக்குமிடத்து, அத்தகைய ஆளின் அடுத்த உறவினர் ஒருவர் அத்தகைய ஆள் இறந்திருக்கலாம் என உண்மையாகவே நம்பினால், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில், பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய ஆளின் இறப்பைப் பதிவுசெய்யும்படியும் அத்தகைய ஆள் தொடர்பிலான இறப்புச் சான்றிதழொன்றை அவருக்கு வழங்கும்படியும் விண்ணப் பிக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் பொருளளவில் இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அது பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது அத்தகைய காணாமற் போன ஆள் கடைசியாக வதிவாளராகவிருந்த அல்லது தனது நிரந்தர வதிவிடத்தை கொண்டிருந்த மாவட்டத்தின் பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவாளருக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

வழங்கப்பட வேண்டிய மேலதிக பத்திரங்கள்.

3. இச்சட்டத்தின்கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும், எந்த ஆளின் இறப்புப் பதிவுசெய்யப்பட வேண்டும் என விண்ணப்பதாரர் நாடுகின்றாரோ அந்த ஆள் இறந்துவிட்டார் எனத் தான் நம்புவதற்கான ஏதுக்களை எடுத்துக்காட்டும் விண்ணப்பதாரரின் ஒரு சத்தியக்கடதாசியுடன் ஆதாரப்படுத்தியும் எந்த கிராம அலுவலரின் பிரிவில் எந்த ஆளுடைய இறப்பு பதிவுசெய்யப் படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்த ஆள் கடைசியாக அந்தப் பிரிவில் வசித்துள்ள அல்லது அவரது நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருந்த அந்தக் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரால், ஓராண்டிற்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு அவரை உயிருடன் காணவில்லை அல்லது அவரைப்பற்றிக் கேள்விப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துகின்ற அந்த கிராம அலுவலரின் அறிக்கையொன்றுடன் சேர்த்து அத்தகைய விண்ணப்பத்திற்கு ஆதாரமான வேறேதேனும் சான்றும் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பத்தை வெளிக்காட்டி வைத்தல்.

4. இச்சட்டத்தின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றுக் கொண்டதன்மேல் விடயத்துக்கேற்ப, பதிவாளர் தலைமையதிபதி அல்லது மாவட்டப் பதிவாளர் தமது அலுவலகத்திலும் எந்த ஆளின் இறப்பு பதிவுசெய்யப்பட வேண்டுமென நாடப்படுகின்றதோ அந்த ஆள் கடைசியாக வசித்த அல்லது தமது நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருந்த பிரிவின் கிராம அலுவலரின் அலுவலகத்திலும் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல் பலகையில் இரண்டு வாரங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அத்தகைய விண்ணப்பத்தின் பிரதியொன்றை வெளிக்காட்டி வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

பதிவு செய்வதற்கான ஆட்சேபனைகள்.

**5.** எந்தத் தேதியன்று இச்சட்டத்தின்கீழான விண்ணப்பத்தின் பிரதியொன்று 4 ஆம் பிரிவின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு முதலில் வெளிக்காட்டி வைக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக எவரேனும் ஆள், அத்தகைய விண்ணப்பம் தொடர்புறுத்தும் ஆளின் இறப்பின் பதிவுபற்றி எழுத்திலான அவரது ஆட்சேபனைகளை விடயத்திற்கேற்ப, பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கலாம். அத்துடன் அத்தகைய ஆட்சேபனை அவற்றிற்கான ஏதுக்களைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றதான ஆட்சேபிப்பவரினதும் வேறெவரேனும் ஆளினதும் சத்தியக்கடதாசியொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதலும் வேண்டும்.

இறப்பைப் பதிவுசெய்தல்.

**6.** (1) விண்ணப்பமொன்றிற்கெதிரான ஆட்சேபனைகளை அனுப்புவதற்கென அனுமதிக்கப்பட்ட ஒருமாத காலப்பகுதி முடிவடைந்ததன்மேல், விடயத்திற்கேற்ப, பதிவாளர் தலைமையதிபதி அல்லது மாவட்டப் பதிவாளர், விண்ணப்பத்துக்கு ஆதாரமாகவுள்ள சான்றுகளுடனும், ஆட்சேபனைகள் எவையுமிருப்பின் அவற்றையும் அவற்றிற்கு ஆதாரமாகவுள்ள சான்றுகளுடனும் சேர்த்து விண்ணப்பத்தைச் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும் என்பதுடன், அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்பு விண்ணப்பத்தில் கூறப்பட்ட விடயங்களின் உண்மைபற்றித் திருப்திப்பட்டால் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் வேண்டும். விண்ணப்பமானது மாவட்டப் பதிவாளருக்குச் செய்யப்பட்டுள்ள விடத்து, மேற்கூறப்பட்டவாறான அத்தகைய விசாரணையின் நிறைவின் மேல் அவர் நிச்சயப்படுத்தக்கூடியவாறாக பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ், பதிவு செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட இறப்புப் பற்றிய விவரங்களை எடுத்துக்காட்டித் தமது கைப்பட ஓர் அறிக்கையைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேல், பதிவாளர் தலைமையதிபதி, 7 ஆம் பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அறிக்கையொன்றை அவர் நிராகரிக்கின்ற விடயத்தில் தவிர, பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் அத்தகைய பதிவாளரால் பேணப்படும் இறப்புக்கள் இடாப்பில் அத்தகைய அறிக்கையில் குறித்துரைக்கப்படும் விபரங்களைப் பதியும்படியும் அத்தகைய ஆள் தொடர்பில் இறப்புச் சான்றிதழை வழங்கும்படியும் தோதான பதிவாளரைப் பணிக்கும் கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(3) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவாளரால் பேணப்படும் இறப்புக்கள் இடாப்பில் இயைபான இறப்புத் தொடர்பிலான விபரங்களைப் பதியும்படியும் அத்தகைய ஆள் தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்றை வழங்கும்படியும் பணிக்கின்றதான (2) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று பதிவாளரால் பெற்றுக்கொள்ளப்பட்டதன் மேல், பதிவாளர் உடனடியாக அவ்விபரங்களை அத்தகைய இடாப்பில் பதிதலும் தோதான இடத்தில் ஒப்பமிடுதலும் வேண்டும் என்பதுடன் இறப்புச் சான்றிதழை வழங்குதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பதிவாளர் தலைமையதிபதியின் எழுத்திலான கட்டளை, இயைபான பதிவின் இணைப்புப் பிரதியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அது பதிவாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தில் அவரது காப்பில் வைக்கப்படுவதற்காக தோதான மாவட்டப் பதிவாளருக்கு இணைப்பிரதியுடன் சேர்த்து பதிவாளரால் அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

சான்றிதழ் ஒன்றை வழங்க மறுப்பதற்கெதிரான மேன்முறையீடும் பிறவும்.

7. ஆறாம் பிரிவின்கீழ் தமக்கு இறப்புச் சான்றிதழொன்றை வழங்க மறுக்கின்ற மாவட்டப் பதிவாளரின் முடிபினால் அதிருப்தியடைந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவர் அல்லது இச் சட்டத்தின் கீழ் இறப்புச் சான்றிதழொன்றை வழங்குவதற்கெதிராக 5 ஆம் பிரிவின்கீழ் ஆட்சேபித்துள்ளவரும் அத்தகைய சான்றிதழை வழங்குவதற்கு மாவட்டப் பதிவாளர் செய்த முடிவினால் அதிருப்தியடைந்துள்ளவருமான ஆள் ஒருவர், விடயத்திற்கேற்ப, அத்தகைய மறுப்பு அல்லது வழங்குகை பற்றிய அறிவிப்பின்மேல் ஒரு மாதத்திற்குள்ளாக விடயத்திற்கேற்ப, அத்தகைய மறுப்புக்கு அல்லது வழங்குகைக்கு எதிராக பதிவாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீட்டைச் செய்யலாம். பதிவாளர் தலைமையதிபதி தம் முன்னருள்ள பத்திரங்களை மீளாய்வு செய்தபின்னர் விடயத்திற்கேற்ப, மாவட்டப் பதிவாளரின் முடிபை உறுதிப்படுத்தலாம் அல்லது 6 ஆம் பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்குமாறு மாவட்டப்பதிவாளரைப் பணிக்கலாம் அல்லது 6 ஆம் பிரிவின் கீழ் அம்மாவட்டப் பதிவாளரால் வழங்கப்பட்ட அறிக்கையை நீக்கஞ்செய்யலாம்.

எந்த ஆட்கள் தொடர்பில் விசாரணை ஆணைக்குழு ஒன்றினால் அல்லது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றினால் துணியப் பட்டுள்ளதோ அந்த ஆட்களின் இறப்புப் பதிவு தொடர்பிலான விசேட நடவடிக்கைமுறை.

8. (1) (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்று அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி ஆணைக்குழுவொன்று ஆளொருவர் மறைந்து போயுள்ளார் அல்லது காணாமற்போயுள்ளார் எனத் துணிந்துள்ளவிடத்து அவ்வாளின் அடுத்த உறவினர் ஒன்றில் பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவ்வாள் கடைசியாக வசித்த அல்லது அவரது நிரந்தர வதிவிடத்தைக்கொண்ட மாவட்டத்தின் மாவட்ட பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவாளருக்கு அவ்வாளின் இறப்பை, பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யுமாறும் அத்துடன் அவ்வாள் தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்றைத் தமக்கு வழங்குமாறும் பொருள்ளவில் இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் 3 ஆம் பிரிவின் நியதிகளின்படியான விண்ணப்பதாரரின் சத்தியக்கடதாசியொன்றுடனும் அத்தகைய ஆளின் இறப்பு தொடர்பில் விடயத்திற்கேற்ப, விசாரணை ஆணைக்குழு அல்லது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் துணிபினது சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடனும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) மாவட்டப் பதிவாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது, இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், விண்ணப்பத்திலும் சேர்த்தனுப்பப்பட்ட சத்தியக்கடதாசியிலும், துணிபிலும் அவரால் நிச்சயப்படுத்த இயலுமாயிருந்தவாறு பிறப்புக்கள், இறப்புக்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட இறப்பின் விவரங்களைத் தந்து அவரது கைப்பட அறிக்கையொன்றைப் பதிவாளர் தலைமை யதிபதிக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

(3) பதிவாளர் தலைமையதிபதி (2) ஆம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்று கிடைக்கப்பெற்றதன் மீது அத்தகைய அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விபரங்களை பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் தோதான பதிவாளரால் பேணப்படும் இறப்புக்கள் இடாப்பில் பதியுமாறும், அத்தகைய ஆள் தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்றை வழங்குமாறும் அத்தகைய பதிவாளரைப் பணிக்கும் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(4) பதிவாளர், பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் அவரால் பேணப்படும் இடாப்பில் இயைபான இறப்பு தொடர்பிலான விபரங்களைப் பதியுமாறு பணிக்கும் (3) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று கிடைக்கப்பெற்றதன் மீது, அவர் அத்தகைய இடாப்பில் அத்தகைய விடயங்களை உடனடியாகப் பதிதல் வேண்டும் என்பதுடன், இடாப்பில் தோதான இடத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(5) பதிவாளர் தலைமையதிபதியால் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட எழுத்திலான கட்டளை இயைபான பதிவின் இணைப்புப்பிரதியுடன் இணைக்கப்படுதல் வேண்டுமென் பதுடன், அத்தகைய இணைப்புப்பிரதியையும் கட்டளையையும் ஒன்றாகச் சேர்த்துப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அவரது அலுவலகத்தில் அவரது காப்பில் பேணப்படுவதற்காக அனுப்பிவைக்கப்படுவதற்கெனப் பதிவாளரால் தோதான மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(6) ஒராம் உட்பிரிவின்கீழ் பதிவாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, (2) ஆம், (5) ஆம் உட்பிரிவு களின் ஏற்பாடுகள் அப்பிரிவுகளில் மாவட்டப் பதிவாளரைப் பற்றிய குறிப்பீடானது பதிவாளர் தலைமையதிபதி பற்றிய குறிப்பீடொன்று என்றாற்போன்று ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடை யனவாதல் வேண்டும்.

## பாகம் II

### இயற்கை அனர்த்தங்களின் அல்லது பேரிடர்களின் காரண மாக காணாமற்போன ஆட்களின் இறப்புக்களின் பதிவு

பதிவாளர் தலைமையதிபதி "தேசிய அனர்த்த இடப்பரப்பு" களை வெளிப் படுத்துதல்.

9. இலங்கையினுள், இலங்கை முழுவதிலாயினுஞ்சரி அதன் குறித்தசில இடப்பரப்புகளிலாயினுஞ்சரி, தேசியமட்டத்தில் பாரதூரமான தாக்கத்தைக்கொண்ட ஆட்களுக்கும் ஆதனங் களுக்குமான அழிவை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தமொன்று அல்லது பேரிடரொன்று இடம்பெற்றுள்ளவிடத்தும், அத்துடன் அத்தகைய அனர்த்தத்தின் அல்லது பேரிடரின் விளைவாக இறந்த ஆட்களின் இறப்புக்களின் சூழ்நிலை காரணமாக அந்த ஆட்களின் இறப்பை பதிவுசெய்வதற்கு பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்குவது செயல் முறைச் சாத்தியமற்றதாக வந்துள்ளதாக இருக்குமிடத்தும், இயற்கை அனர்த்தம் அல்லது பேரிடரொன்று ஏற்பட்டுள்ளது என்ற நிகழ்வை உறுதிப்படுத்துவதன்மீது பதிவாளர் தலைமையதிபதி விடயத்திற்கேற்ப, அத்தகைய அனர்த்தத்தால் அல்லது பேரிடரால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நிர்வாக மாவட்டத்தை, பிரதேசச் செயலாளரின் பிரிவை அல்லது கிராம அலுவலரின் பிரிவை "தேசிய அனர்த்த இடப்பரப்பு" ஒன்றாக வெளிப்படுத்தலாம்.

ஏதேனும் இயற்கை அனர்த்தத்தின் அல்லது பேரிடரின் காரணமாக காணாமல் போயுள்ள ஆட்களின் விடயத்தில் இறப்புச் சான்றிதழை வழங்கப் பெறு வதற்கு யார் விண்ணப்பிக்க லாம் என்பதும் அதன் நடவடிக்கை முறையும்.

10. (1) (அ) ஒன்பதாம் பிரிவின்கீழ் தேசிய அனர்த்த இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பொன்றிற்குள் வசித்துவந்த ; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் இடப்பரப்பில் வசித்துவந்த வரும் ஆனால், அத்தகைய அனர்த்தம் அல்லது பேரிடர் இடம்பெற்ற நேரத்தில் 9 ஆம் பிரிவின் கீழ் தேசிய அனர்த்த இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பிற்குப் போயிருந் ததாக அல்லது அதற்குள் இருந்திருப்பதாக அறியப்பட்டவருமான, எவரேனும் ஆளை அல்லது ஆட்களை,

அத்தகைய இயற்கை அனர்த்தத்தை அல்லது பேரிடரையடுத்து கண்டு பிடிக்க முடியாதவிடத்தும், அத்துடன் எல்லா கருத்து நோக்கங்களுக்காகவும் அத்தகைய அனர்த்தத்தின் அல்லது பேரிடரின் விளைவொன்றாக காணாமற்போயுள்ளவிடத்தும் அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் அடுத்த உறவினர் ஒருவர் அல்லது அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் குடும்ப உறுப்பினர், எவரும் அனர்த்தத்தில் அல்லது பேரிடரில் உயிர்பிழைக்காதவிடத்து, அத்தகைய ஆளை அல்லது ஆட்களை அறிந்திருப்பவரெவரும் அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் இறந்துள்ளார் அல்லது இறந்துள்ளனர் என உண்மையிலேயே நம்புவாராயின், அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் இறப்பை, பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் பதிவு செய்ய இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் விண்ணப்பிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் இறப்பு தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்று அவருக்கு வழங்கவும்படலாம்.

(2) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும், எந்த ஆளின் இறப்பு பதிவுசெய்யப்படுவதற்கென நாடப்படுகின்றதோ அந்த ஆள் வழமையாக வசித்து வந்த இடப்பரப்பின் கிராம அலுவலருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும், எத்தன்மைய தான ஏதேனும் படிவத்தில் இயலுமானவிடத்து இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒருசில தகவலையாவது உள்ளடக்கி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தகவல் சாத்தியப்படக்கூடியவரை எந்த ஆளின் இறப்பு பதிவுசெய்யப்பட நாடப்படுகின்றதோ, அந்த ஆளின் விவரணமொன்றாயிருத்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் அத்தகைய நிகழ்வுக்கு ஆதாரமாக சத்தியக்கடதாசியொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். கிராம அலுவலர் அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன் மீது கூடியவிரைவில், அவர் அவசியமானதெனக் கருதும் அத்தகைய விசாரணையின் பின், அதனை விதப்புரைசெய்து அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின்

செம்மையை அவரது அறிவுக்கெட்டியவரை உறுதிப்படுத்தும் அறிக்கையொன்றுடன் அதனை, அவரது பிரிவு அமைந்திருக்கும் பிரதேசச் செயலாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். பிரதேசச் செயலாளர் அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றையும் புறக்குறிப்புசெய்து அதனை பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) பதிவாளர் தலைமையதிபதியானவர், (2) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முறையாக விதப்புரை செய்யப்பட்டு புறக் குறிப்பிடப்பட்டு கிடைக்கப்பட்டதன் மீது அத்தகைய விண்ணப் பத்தில் குறித்துரைக்கப்பட்ட விவரங்களை பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் அத்தகைய பதிவாளரால் பேணப்படும் இறப்புக்கள் இடாப்பில் பதிவுசெய்யுமாறும் அத்தகைய ஆள் தொடர்பில் இறப்புச் சான்றிதழ் ஒன்றை வழங்கு மாறும் தோதான பதிவாளரைப் பணித்து கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(5) பதிவாளர், பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் அவரால் பேணப்படும் இறப்புக்கள் இடாப்பில் இயைபான இறப்பு தொடர்பிலான விவரங்களைப் பதியுமாறு தம்மைப் பணிக்கும் (4) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று கிடைக்கப்பெற்றதும் உடனடியாக அத்தகைய விவரங்களை அத்தகைய இடாப்பில் பதிதலும் அத்தகைய இடாப்பை தோதான இடத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(6) பதிவாளர் தலைமையதிபதியால் (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட எழுத்திலான கட்டளை, இயைபான பதிவின் இணைப்புப்பிரதியுடன் இணைக்கப்படுதல் வேண்டுமென் பதுடன், அத்தகைய இணைப்புப்பிரதியையும் கட்டளையையும் ஒன்றாகச் சேர்த்துப் பதிவாளரால் பதிவாளர் தலைமையதி பதிக்கு அவரது அலுவலகத்தில் காப்பிலிடப்படுவதற்காக தோதான மாவட்டப்பதிவாளருக்கு அனுப்பப்படுதலும்வேண்டும்.

(7) ஒராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பம் பதிவாளர் தலைமையதிபதிக்கு நேரடியாக செய்யப்படுமிடத்து, (2) தொடக்கம் (6) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், அவ்வுட்பிரிவுகளில் மாவட்டப் பதிவாளரைப் பற்றிய குறிப்பீடானது பதிவாளர் தலைமையதிபதியைப் பற்றிய குறிப்பீடொன்று என்றாற்போன்று எற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

வெளிநாட்டு இனத்தவர்களின் இறப்பைப் பதிவுசெய்தல்.

**11.** வேறோர் அரசின் நாட்டினத்தவர் ஒருவர் இலங்கையில் இருந்துள்ளார் எனவும், 9.ஆம் பிரிவின் நியதிகளின்படி தேசிய அனர்த்த இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பொன்றில் தற்காலிகமாக வசித்திருந்தார் எனவும் காட்டுவதான சான்று இருக்குமிடத்தும், அத்துடன் அத்தகைய ஆள் சம்பந்தப்பட்ட அனர்த்தத்தின் அல்லது பேரிடரின் விளைவாக இறந்துள்ளார் என்பது வெளிப்படையாகவுள்ளவிடத்தும் அப்போது, இந்நிகழ்வுகளைப் பற்றி அறிந்திருக்கும் ஆளெவரும் அத்தகைய ஆள் தொடர்பிலான இறப்புச் சான்றிதழொன்று அவருக்கு வழங்கப்படுதல் வேண்டுமென விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் அத்தகைய ஆள் எந்த நாட்டில் பிரசையொருவராக இருந்தாரோ அந்த நாட்டின் இலங்கையில் சமுகமாயிருக்கும் பிரதிநிதியால் சான்றுறுதிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், பதிவாளர் தலைமையதிபதிக்கு நேரடியாக அனுப்பப்படுதலும் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி அத்தகைய இறப்பை உடனடியாகப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்றை வழங்குதலும் வேண்டும்.

## பாகம் III

### நானாவித ஏற்பாடுகள்

சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாமை.

**12.** இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், 1988 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சான்று (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான சான்றுக்கட்டளைச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எந்த ஆளின் இறப்பு ஏதேனும் பயங்கரவாத அல்லது நாசகார செயற்பாட்டிற்கு அல்லது குடியமைதிக்குலைவுக்கு அல்லது ஏதேனும் இயற்கை

அனர்த்தத்திற்கு அல்லது பேரிடருக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாகவும், 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி தேசிய அனர்த்த இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பொன்றினுள் ஏற்பட்டதாகவும் உள்ளதோ அந்த ஆள் தொடர்பிலான இறப்புச் சான்றிதழின் வழங்கலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*இறந்து விட்டதாகப் பதிவு செய்யப்பட்டவரான ஆள் உயிருடன் இருப்பதாகக் காணப்படுமிடத்திலான நடவடிக்கை முறை.*

13. (1) இச்சட்டத்தின் 2 ஆம், 8 ஆம், 10 ஆம் பிரிவின்கீழ் அல்லது 11 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி ஏதேனும் ஓர் இறப்புப் பதியப்பட்டிருந்து, அதன் பின்னர் எந்த நேரத்திலும் எவரேனும் ஆள், அவ்வாறு இறந்துள்ளதாகப் பதிவுசெய்யப்பட்டவரான ஆள் உயிருடன் உள்ளார் என அறியவரின், உடனடியாக அத்தகைய ஆள் அத்தகைய தகவலை பதிவாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) பதிவாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய தகவலைப் பெற்றுக்கொண்டதன்மேல், இயைபான பொலிசு நிலையப் பொறுப்பலுவலருக்குத் தகவலைத் தெரிவித்தல் வேண்டும். அவர் அத்தகைய தகவலின் உண்மை பற்றி விசாரித்து, எந்தத் திகதியன்று அத்தகைய அலுவலருக்கு அத்தகைய தகவல் தெரிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள்ளாகப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையொன்றை அனுப்புதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேலும், அவர் அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய விசாரணையின் பின்னரும், பதிவாளர் தலைமையதிபதி, எந்த ஆளுடைய இறப்பு பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆள் உயிருடன் இருக்கின்றார் என்பதுபற்றித் திருப்திப்பட்டால் பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின் 52 ஆம் பிரிவின்கீழ், விடயத்தின் சூழ்நிலைகளில் தோதாகவிருக்கின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் அல்லது கட்டளையை ஆக்குதல் வேண்டும் அல்லது அத்தகைய பணிப்பைக் கொடுத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழ் பதிவாளர் தலைமையதிபதியால் நடாத்தப்படும் விசாரணை எதுவும் அதனது தொடக்கத்திலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக முடிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பதிவாளர் தலைமையதிபதியானவர், இச்சட்டத்தின் கீழான விசாரணையொன்றின் நோக்கங்களுக்காக பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் அவரால் நடாத்தப்படும் விசாரணையொன்று தொடர்பில் அச்சட்டத்தின்கீழ் அவரால் பிரயோகிக்கப்படற்பாலனவான எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம்.

14. ஐயம் தவிர்ப்பதற்கு இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது :- ஐயம் தவிர்த்தல்.

(அ) இச்சட்டத்தின் நடைமுறை 1 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடைந்ததன்மீது முடிவுற்றிருப்பின் அத்துடன் 1 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி சட்டம் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியின் நீடிப்பிற்கான கட்டளையெதுவும் ஆக்கப்படாதிருப்பின் ; அத்துடன்

(ஆ) ஆளொருவர் இறந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டு அத்தகைய ஆள் தொடர்பில் இச்சட்டம் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் இறப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படுவதற்கு இச்சட்டத்தின் 2 ஆம், 8 ஆம், 10 ஆம் மற்றும் 11 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி விண்ணப்பம் செய்யப்பட்டிருப்பின்,

பதிவாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் முறையே பாகம் I மற்றும் பாகம் II என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அத்தகைய ஆளின் இறப்பைப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதுடன், அத்தகைய ஆள் தொடர்பில் இறப்புச் சான்றிதழையும் வழங்கலாம்.

தவறுகள்.

15. எந்த ஆள் -

(அ) இச்சட்டத்தின்கீழ் அவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் அறிந்துகொண்டே பொய்யான கூற்றொன்றைச் செய்கின்றாரோ அல்லது இச் சட்டத்தின்கீழ் பொய்யான தகவலைக் கொடுத்துதவுகின்றாரோ ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பின்பற்றி ஓர் ஆளின் இறப்புப் பதிவுசெய்யப்பட்டிருந்து அந்த ஆள் உயிருடன் உள்ளார் என்பதைத் தெரிந்துள்ளவராக இருந்துகொண்டு பதிவாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய தகவலைக் கொடுத்துதவத் தவறுகின்றாரோ ; அல்லது

(இ) இறப்புச் சான்றிதழில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் உயிருடன் உள்ளார் எனத் தெரிந்துகொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருந்தும் பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழொன்றை நேர்மையற்றவிதமாக அல்லது மோசடியாகப் பயன்படுத்துகின்றாரோ,

அந்த ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல்நீதிமன்றத்தினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

16. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

17. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி - பொருள்கோடல்.

"தோதான மாவட்டப் பதிவாளர்", "தோதான பதிவாளர்" அத்துடன் "மாவட்டம்" என்பன பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தினால் அவ்வவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டனவாகும் ;

"பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டம்" என்பது (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டம் எனப் பொருள்படும் ;

"மாவட்டப் பதிவாளர்" என்பது பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவரான பிறப்புக்கள், இறப்புக்கள் மாவட்டப் பதிவாளர் எனப் பொருள்படும் ;

"பதிவாளர் தலைமையதிபதி" என்பது பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவாளர் தலைமையதிபதி என்று பொருள்படும் என்பதுடன், மேலதிகப் பதிவாளர் தலைமையதிபதியொருவரையும் பிரதிப் பதிவாளர் தலைமையதிபதி ஒருவரையும் அத்துடன் உதவிப் பதிவாளர் தலைமையதிபதி ஒருவரையும் உள்ளடக்கும்.

## அட்டவணை

(பிரிவுகள் 2,8 மற்றும் 10)

### காணாமற்போனவரான ஆளொருவரின் இறப்பைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்

1. காணாமற்போன ஆளின் முழுப்பெயர் :- ..........................................
2. பாலும், இனமும் :- ..........................................
3. வயது :- ..........................................
4. இறந்த தேதி (ஏறத்தாழ) :- ..........................................
5. அறியப்பட்ட கடைசி வதிவிட முகவரி :- ..........................................
6. நிரந்தர வதிவிட முகவரி :- ..........................................
7. பதவி அல்லது தொழில் :- ..........................................
8. விண்ணப்பதாரரின் முழுப்பெயரும் வதிவிடமும் :- ..........................................
9. காணாமற்போன ஆளுக்கும் விண்ணப்பதாரருக்குமுள்ள உறவு :- ........

..........................................................................................................

..........................................................................................................

.................................................................. என்னும் முகவரியைச் சேர்ந்த .................................................. ஆகிய நான், சொல்லப்பட்ட ........................ (காணாமற்போன ஆளின் பெயர்) ஓராண்டுக்கு மேலாகக் காணப்படாதுள்ளார் எனவும், சொல்லப்பட்ட .................................................. என்பவர் இறந்துவிட்டார் என நிச்சயமாக நம்புகிறேன் எனவும் இத்தால் நான் கூறுகிறேன்.

ஆகவே இறப்பானது (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டுமெனவும் அத்தகைய இறப்பு தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்று எனக்கு வழங்கப்படவேண்டும் எனவும் நான் வேண்டுகிறேன்.

..........................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

தேதி :- ..........................................

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்